**செ.வெ.எண்: 113** **நாள்: 12-04-2021**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில், உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் தேர்வு 17.04.2021 அன்று முற்பகல் மற்றும் பிற்பகலும், வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) பதவிக்கான போட்டித் தேர்வு 18.04.2021 அன்று முற்பகல் மற்றும் பிற்பகலும், தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் பதவிக்கான தேர்வு 18.04.2021 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் & 19.04.2021 அன்று முற்பகல் மட்டும் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டித் தேர்வுகளை 1581 தேர்வர்கள் எழுத உள்ளனர். மேற்படி போட்டித்தேர்வானது திருநெல்வேலி மாவட்டத்தில் ஜன்ஸ்டீன் பொறியியல் கல்லூரி மற்றும் ஐன்ஸ்டீன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீதபற்பநல்லூரில் வைத்து நடைபெறவுள்ளது. மேற்படி தேர்வினை கண்காணிப்பதற்கு வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலைகளில் நான்கு சுற்றுக்குழு அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு கூடுதலாக இயக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திடவும், தேர்வு நடைபெறும் மையத்தின் அருகாமையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் வைத்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் வர இருப்பதால் தேர்வு மையங்களில் “கொரோனா” தொற்றின் காரணமாக, சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு பராமரித்திடுமாறு, உதவி இயக்குநர் (பேரூராட்சி/ஊராட்சி) துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவோர் தங்களின் தேர்வு மையங்களை முன்கூட்டியே கண்டறிந்து தேர்வு எழுத வருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேர்வு எழுதுபவர்கள் கட்டாயமாக முகக்கவசம் அணிந்து வரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு அறையினுள் செல்போன் மற்றும் மின்னணு சாதனங்கள் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார்.

**வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**